ஆதரவு தெரிவித்து, அதற்கு உறுதுணையாக இருப்போம் என்று கூறி, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று திங்கட்கிழமை(17—11—1986) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-03 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

135. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு சட்டமன்ற (உறுப்பினர்கள் ஊதியங்கள் மற்றும் மருத்துவச் செலவு ஈட்டுத் தொகை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பொது (பணியாளரமைப்பு-1) துறையின் 1—8—1986 ஆம் நாளிட்ட 1481 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு ஊதியங்கள் வழங்கல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1951) 16 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

136. சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்ட நாளை குறிப்பிடுதல் குறித்து தொழில் (எம். ஐ. டி.-1) துறையின் 29—8—1986 ஆம் நாளிட்ட 934 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிர்வாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும், மாற்றுதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1984) 33 (4) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

137. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 18—7—1986 ஆம் நாளிட்ட 707 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

138. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு கள் மற்றும் சாராய கடைகள் (ஏலத்தில் தீர்வு செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 6—5—1986 ஆம் நாளிட்ட 544-ஆம் எண் அரசாணையில் வெளி

யிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

139. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தினரால் விற்கப்படும் சாராய இருப்பிற்கு கூடுதல் விற்பனை கட்டணம் செலுத்துவது குறித்து மதுவிலக்கு-ஆயத்தீர்வைத் துறையின் 24-3-1986ம் நாளிட்ட 332 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.